**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 320/2022 PW . 2**

Name : சேவியர் Fathers /Husband's Name : செபஸ்டியான்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2024

**1, 3 எதிரிகள் ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் காரைக்குடியில் வசித்து டிரைவராக வேலை பார்க்கிறேன். 1ம் எதிரியை தெரியும். 3ம் எதிரியை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

22.02.2015ம் தேதி மாலை 4 மணிக்கு எதிரிகள் எங்கள் கம்பெனியில் வெளிப்புற கேட்டின் வழியாக வந்து அசா. 1ஐ தலையை பிடித்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி அருகில் கிடந்த கம்பை எடுத்து தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக நான் கேள்விப்பட்டு போலீசார் விசாரித்தபோது மேற்கண்ட விபரங்களை கூறிவிட்டு தற்போது உண்மை விபரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 320/2022 PW . 3**

Name : சரவணன் Fathers Name : கோபாலகிருஷ்ணன்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2024

**1, 3 எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் குளித்தலையில் வசித்து பிஸ்னெஸ் வேலை பார்க்கிறேன். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்னர் மாதம், தேதி நினைவு இல்லை. காரைக்குடி என்.என்.எல். பஸ் கம்பெனிக்கு டிக்கெட் மிஷின் விற்பனை சம்பந்தமாக சென்றிருந்தேன். அப்போது ராஜேந்திரன் என்ற பெயர் கொண்ட நபர் வந்தார். அவர் நீதிமன்றத்தில் உள்ளாரா என்றால் அடையாளம் நினைவு இல்லை. அப்போது அவர் அங்கிருந்த அசா. 1 மற்றும் ஆனந்தன் ஆகியோருடன் பாண்டி இருக்கிறாரா என்று கேட்டார். அதைக்கேட்ட இருவரும் ஓனரை மரியாதையாக பேசுங்கள் என்றனர். உடனே ராஜேந்திரம் கோபமாக பேசி அசா. 1ன் தலையில் அடித்துவிட்டார். அங்கிருந்தவர்கள் சமாதானம் செய்து அனுப்பி வைத்தோம். பிறகு போலீசார் இதுசம்பந்தமாக போன் மூலம் என்னிடம் விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் 15 ஆண்டுகளாக மேற்கண்ட தொழிலை செய்கிறேன். எத்தனை ஆண்டுகளாக என்என்.எல் நிறுவனத்துடன் தொழில் செய்கிறேன் என்றால் சுமார் 12 ஆண்டுகளாக தொழில் செய்கிறேன். அதன் அடிப்படையில் வியாபார ரீதியாக அதன் உரிமையாளருடன் எனக்கு நல்ல பழக்கம் என்றால் சரிதான். காரைக்குடி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் என்ற அமைப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் அந்த சங்கத்தின் தலைவராக என்என்.எல். உரிமையாளர் இருந்தார் என்றால் இருந்திருக்கலாம். காரைக்குடியில் தனியார் பேருந்து ஓட்டுநர், நடத்துனர் தொழில் சங்கம் உள்ளது என்றால் அதுபற்றி கேள்விப்பட்டுள்ளேன். நான்

சொன்னதுபோல் சொன்ன தேதியில் சம்பவம் நடக்கவில்லை என்றும், அந்த தேதியில் ராஜேந்திரன் என்பவர் தொழில் சங்க தலைவராக இருந்ததால் என்என்எல். பேருந்து உரிமையாளரிடம் அதன் தொழிலாளர்கள் சம்பந்தமாக பேசுவதற்காக சென்றிருந்தார் என்றும் அப்போது அதன் உரிமையாளருக்கும், 1ம் எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றும் அப்போது என்என்எல் பஸ் உரிமையாளர் நீ என்னடா என்னிடம் பேசுவது என அவர் தான் 1ம் எதிரியை மரியாதை குறைவாக பேசி வெளியேற்றினார் என்றால் சரியல்ல. நான் நேரடியாக சென்று காவல்நிலையத்தில் வாக்குமூலம் கொடுக்கவில்லை. அவ்வாறு நேரடியாக வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். காயம்பட்ட நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. நானும் என்என்எல். பஸ் உரிமையாளரும் நெருங்கிய நண்பர்கள் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை